SALCO
South Asian Legal Clinic of Ontario

# கனடாவில் முடிவெடுக்கும் பொறுப்பு மற்றும் பெற்றோருக்குரிய நேரம்

**(இது பாதுகாவல் பொறுப்பு மற்றும் அணுகல்/பார்வையிடுதல் என முன்னர் அழைக்கப்பட்டது)**

**பெற்றோர்கள் இருவரும் ஒன்றாக வாழ முடியாது என்று முடிவு செய்தால், அவர்கள் பின்வருவன குறித்து முடிவு செய்ய வேண்டும்:**

- தங்கள் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட முக்கியமான முடிவுகளை எடுக்கப்போவது யார்
- பிள்ளைகள் ஒவ்வொரு பெற்றோருடனும் செலவிடப்போகும் நேரம் எவ்வளவு )ஒரு பிள்ளை இரு பெற்றோருடனும் சேர்ந்து வாழ வேண்டியதில்லை ஆனால் பெற்றோரில் ஒவ்வொருவருடனும் குறிப்பிட்ட நேரத்தைச் செலவிட முடியும்)

இந்த இரண்டு பிரச்சனைகளும் சட்டப்பூர்வமாக முடிவெடுக்கும் பொறுப்பு (பாதுகாவல் பொறுப்பு என்று முன்னர் அழைக்கப்பட்டதுமற்றும் ( பெற்றோருக்குரிய நேரம் )அணுகல் அல்லது பார்வையிடுதல் என முன்னர் அழைக்கப்பட்டது) என அறியப்படுகின்றன

பெற்றோர்கள் இருவரும் திருமணமாகி விவாகரத்துப் பெற்றிருந்தால், அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் மத்திய அரசாங்கச் சட்டமாகிய விவாகரத்து அதிகாரச் சட்டத்திற்கு அமைந்தபடி இருக்கும்.

பெற்றோர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் அல்லது அவர்கள் விவாகரத்து செய்ய விரும்பவில்லை என்றால், அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் யாவும் மாகாணச் சட்டத்தின் கீழ் இருக்கும். இது ஒன்ராறியோவில் குடும்பநல அதிகாரச் சட்டம் என அழைக்கப்படும்.

SALCO
South Asian Legal Clinic of Ontario

## முடிவெடுக்கும் பொறுப்பு

**முடிவெடுக்கும் பொறுப்பு என்றால் என்ன?**

- இது உடல்நலம், கல்வி, கலாச்சாரம், மொழி, மதம் மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட முக்கியமான நடவடிக்கைகள் பற்றிய முடிவுகள் உட்படப் பிள்ளையின் நல்-வாழ்வு பற்றிய முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கான பொறுப்பாகும்

நீதிமன்ற உத்தரவு அல்லது பெற்றோருக்கு இடையேயான ஒப்பந்தம் மூலம் முடிவெடுக்கும் பொறுப்பு தீர்மானிக்கப்பட முடியும்.

### முடிவெடுக்கும் பொறுப்பு வகைகள்:

1. **முழுமையாக முடிவெடுக்கும் பொறுப்பு (Sole decision-making responsibility) –** ஒப்பந்தம் அல்லது நீதிமன்ற உத்தரவு ஏதாவது கூறினால் அன்றி, மற்றப் பெற்றோரின் சம்மதம் அல்லது ஈடுபாடு இல்லாமல் பிள்ளைகளைப் பற்றிய அனைத்து முக்கிய முடிவுகளையும் எடுக்கப் பெற்றோரில் ஒருவருக்கு உரிமை உண்டு.

2. **இணைந்து முடிவெடுக்கும் பொறுப்பு (Joint decision-making responsibility) –** பிள்ளைகளைப் பற்றிய முக்கியமான முடிவுகளை எடுக்கும் உரிமையைப் பெற்றோர்கள் இருவரும் பகிர்ந்து கொள்கிறார்கள், மேலும் பெற்றோர் இருவரும் இணைந்து முடிவெடுக்கிறார்கள்.

3. **நடைமுறைப்படி முடிவெடுக்கும் பொறுப்பு (De facto decision-making responsibility)) –** நிரந்தரமாக முடிவெடுக்கும் பொறுப்பை நீதிமன்றம் தீர்மானிக்கும் வரைக்கும், பெற்றோரில் ஒருவர் வெளியேறுவதைத் தொடர்ந்து, பிள்ளைகளுடன் வசிக்கும் பெற்றோருக்குத் தானாகவே முடிவெடுக்கும் பொறுப்பு உள்ளது. நடைமுறையில் முடிவெடுக்கும் பொறுப்பைக் கொண்டிருப்பது மற்ற பெற்றோர் இந்த ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டதைக்

குறிக்கிறது. எந்தவொரு சட்ட ஏற்பாடும் இல்லாததால், முழுமையாக முடிவெடுக்கும் பொறுப்பிலிருந்து இது வேறுபட்டது.

## பெற்றோருக்குரிய நேரம் (Parenting Time)

**பெற்றோருக்குரிய நேரம் என்றால் என்ன?**

• பிள்ளைகள் பெற்றோருடன் செலவிடும் நேரம்
• இதற்குப் பிள்ளை உடல் ரீதியாகப் பெற்றோரின் முன்னிலையில் இருக்க வேண்டியதில்லை. உதாரணமாகப், பெற்றோர் பிள்ளையுடன் செலவிடும் நேரம் ஒரு பாடசாலை நாளாக இருந்தால், பிள்ளை பாடசாலையில் கழிக்கும் நேரமும் அந்தப் பெற்றோருக்குரிய நேரத்திற்குள் அடங்கும். பிள்ளை பெற்றோருடன் இருக்கும்போது, உணவு, உறங்கும் நேரம் போன்ற அன்றாட முடிவுகளை எடுக்கும் உரிமையும் பெற்றோருக்குரிய நேரத்தில் அடங்கும். தங்கள் பிள்ளையின் நல்-வாழ்வைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்குப் பெற்றோருக்கு உரிமை உண்டு.
• நீதிமன்ற உத்தரவு அல்லது பெற்றோருக்கு இடையேயான ஒப்பந்தம் மூலம் பெற்றோருக்குரிய நேரம் தீர்மானிக்கப்பட முடியும்.

**பெற்றோருக்குரிய-நேரம் குறித்த ஏற்பாடுகளின் வகைகள் (Types of parenting-time arrangements):**

1. பகிரப்படும் பெற்றோருக்குரிய நேரம் (Shared parenting time) – பெற்றோர் இருவரும் தங்கள் பிள்ளையுடன் செலவிடும் நேரத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். பிள்ளை ஒவ்வொரு பெற்றோருடனும் குறைந்தது 40% நேரத்தைச் செலவிடுகிறது என்பதே இதன் பொருளாகும்
2. பிரிக்கப்படும் பெற்றோருக்குரிய நேரம் (Split parenting time) – ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளுடைய பெற்றோர் ஒவ்வொருவரும் தனித்தனியே பெரும்பாலான நேரத்தைக் (60% க்கும் அதிகமாக) குறைந்தபட்சம் ஒரு பிள்ளையுடன் செலவிடுவதை இது குறிக்கிறது.

3. மேற்பார்வையிடப்படும் பெற்றோருக்குரிய நேரம் (Supervised parenting time) - பெற்றோரில் ஒருவர் தமது பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடும்போது வேறு யாராவது கட்டாயமாக அங்கு இருக்கவேண்டும். பாதுகாப்புக் குறித்த கரிசனைகள் இருக்குமானால், சந்திப்புகளின் போது இது நடைபெறுவது வழக்கமாகும்.

**பெற்றோர்கள் இருவரும் முடிவெடுக்கும் பொறுப்பு மற்றும் பெற்றோருக்குரிய நேர ஏற்பாடுகளில் உடன்பட்டால், அவர்கள்:**

- அவர்களின் முறைசாரா ஒப்பந்தத்தை கோடிட்டுக் காட்டும் பெற்றோருக்குரிய திட்டத்தை உருவாக்கலாம் அல்லது
- பெற்றோருக்குரிய திட்டத்தை அவர்களது பிரிவினை ஒப்பந்தத்தில் சேர்த்து, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் அல்லது
- நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக்கொள்ளலாம் (நீதிமன்ற நடவடிக்கை ஏற்கனவே தொடங்கப்பட்டிருந்தால்)

**பெற்றோர்கள் இருவரும் முடிவெடுக்கும் பொறுப்பு மற்றும் பெற்றோருக்குரிய திட்ட ஏற்பாடுகளில் உடன்படவில்லை என்றால், அவர்கள்:**

- தீர்க்கப்படாமல் இருக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் நீதிபதியின் முன் தீர்த்துக் கொள்வதற்கு நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும். ஒரு பிள்ளை தொடர்பான முடிவெடுக்கும் பொறுப்பு அல்லது பெற்றோருக்குரிய நேர ஏற்பாடுகளை அமைக்கும் பெற்றோருக்குரிய உத்தரவு ஒன்றைப் பின்னர் நீதிபதி வழங்குவார்.

**ஒரு பிள்ளை தொடர்பான முடிவெடுக்கும் பொறுப்பு மற்றும் ஒவ்வொரு பெற்றோருடனும் அவர்கள் செலவிடும் நேரம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் போது, பிள்ளையின் சிறந்த நலன்களைக் கவனத்திற் கொள்வதுடன், பின்வருவன போன்ற காரணிகளையும் நீதிமன்றம் கருத்திலெடுக்கும்:**

SALCO
South Asian Legal Clinic of Ontario

- பிள்ளையின் நிலையுறுதித் தன்மைக்கான தேவை
- ஒவ்வொரு பெற்றோருடனும் பிள்ளைக்கிருக்கும் உறவு
- பிள்ளையின் பராமரிப்புக் குறித்த வரலாறு
- பிள்ளையின் கண்ணோட்டங்கள் மற்றும் விருப்பங்கள்
- பிள்ளையின் மதம் மற்றும் கலாச்சாரம்
- ஏதாவது குடும்ப வன்முறை குறித்த விவரம்

## முடிவெடுக்கும் பொறுப்பு மற்றும் பெற்றோருக்குரிய நேர ஏற்பாடுகளை மாற்றுதல்

**பெற்றோர்களிடையே தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால்:**

- அவர்கள் புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, பழைய ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்பதை ஏற்றுக்கொள்ளலாம்
- மாற்றங்களை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், அவர்கள் அதை நீதிமன்றத்திற்கு வெளியே மத்தியஸ்தம் போன்ற தகராறு தீர்வு முறை மூலம் தீர்க்க முயற்சி செய்யலாம் அல்லது நீதிமன்றத்திற்குச் செல்லலாம் (அவர்கள் அந்த ஒப்பந்தத்தை ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால்)

**பெற்றோர் ஒரு நீதிமன்ற உத்தரவைப் பெற்றிருந்தால்:**

- அவர்கள் மாற்றங்களை ஏற்கவில்லை என்றால், முன்னைய உத்தரவை “மாற்றியமைக்குமாறு” (மாற்றும்படி) அவர்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும், கடைசி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து பிள்ளையின் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்
- அவர்கள் அந்த மாற்றங்களுக்கு ஒப்புக்கொண்டால், புதிய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, அதை எனப்படும் "ஒப்புதல் உத்தரவு" உத்தரவில் வைக்குமாறு நீதிமன்றத்திடம் கேட்டுக்கொள்ளலாம்